**10 - STD** **அரையாண்டுத் தேர்வு - 2023** பதிவு எண்.

**தமிழ்**

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 15 x 1 = 15

1. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று _____ வேண்டினார்
அ) எலிசபெத் கருணையனுக்காக ஆ) கருணையன் பூக்களுக்காக
இ) கருணையன் எலிசபெத்துக்காக ஈ) பூக்களுக்காக கருணையன்

2. குளிர் காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள் _____
அ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள் ஆ) மருதம், நெய்தல், பாலை நிங்கள்
இ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஈ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

3. மேன்மை தரும் அறம் என்பது _____
அ) புகழ் கருதி அறம் செய்வது அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
இ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

4. 'வீட்டைத்துடைத்து சாயம் அடிப்பது' இவ்வடி குறிப்பது _____
அ) காலம் மாறுவதை ஆ) வண்ணம் பூசுவதை
இ) வீட்டைப்துடைப்பதை ஈ) இடையறாது அற்ப்பணி செய்வதை

5. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப் போக்கன் கேட்பது _____ வினா. 'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறுவது _____ விடை
அ) ஐய வினா, எதிர் விடை ஆ) அறியாவினா, சுட்டுவிடை
இ) கொளல்வினா, இனமொழி விடை ஈ) அறியாவினா, உற்றது உரைத்தல் விடை

6. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி _____
அ) ஜால்ரா ஆ) உறுமி இ) பறை ஈ) நாகசுரம்

7. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' யார் யாரிடம் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவர் நோயாளியிடம் ஈ) நோயாளி மருத்துவரிடம்

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது
அ) திருக்குறள் அ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) புறாநானூறு

9. கோசல நாட்டின் கொடை இல்லாத காரணம் _____
அ) அங்கு வறுமை இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அங்கு நல்ல உள்ளம் உடையவர் இல்லாததால் ஈ) அரசன் கொடுங்கோல் ஆட்சி

10. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) குலா ஆ) துலா இ) இலா ஈ) சீலா

11. '<u>பெரிய மீசை சிரித்தார்</u>' - அடிக்கோடிட்ட சொல்லிற்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை அ) உவமைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15 )விடையளி

'அன்று அவன் அசைஇ, அல்சேர்ந்து அல்கி
இன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம்போகி,
அளங்கு கழை நாலும் ஆரிப்படுகர்'

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் _____
அ) காசிக்காண்டம் ஆ) பரிபாடல் இ) மலைபடுகடாம் ஈ) முல்லைப்பாட்டு

13. 'அசைஇ' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு _____
அ) உயிரளபெடை ஆ) செய்யுளிசைஅளபெடை



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

இ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

14. 'நாலும்' என்னும் சொல்லின் பொருள் ______
அ) பள்ளம் ஆ) சுற்றம் இ) ஒலிக்கும் ஈ) மூங்கில்

15. பாடலில் இடம் பெற்றுள்ள சீர் எதுகை ______
அ) அன்று, கன்று ஆ) செயலைச், செப்பம்
இ) அல்சேர்ந்து, அல்கி ஈ) அன்று, அவன்

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.21 கட்டாயம்) 4 x 2 = 8**

16. விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழி
ஆ) தமிழில் 'சொல்லாய்வுக்' கட்டுரைகளைப் பாவாணர் எழுதினார்.

17. 'வாழ்வில் தலைக்கனம், தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

18. மெய்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

19. 'வசன கவிதை' - குறிப்பு வரைக?

20. வருமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி. என்பதற்கு சான்று தருக.

21. 'விடும்' - என முடியும் குறளை எழுதுக?

**III, எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5 x 2 = 10**

22. முன்னுக்குப் பின் - இச்சொற்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க?

23. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும் பொழுது அம்மா வழிஅனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

24. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

25. வேங்கை என்பதை தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக?

26. 'பதிந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக?

27. கலைச்சொல் தருக: அ) Devotional literature ஆ) Humanism

28. எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக?
அ) எறும்புந்தன் கையால் எண்சாண் ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி 2 x 3 = 6**

29. 'தலையைக் கொடுத்தாலும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டி பொருள் விளக்குக?

30. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

31. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:
தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில்சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.
அ) தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி யாது?
ஆ) தேவராட்டத்தில் எத்தனை கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பது மரபு?
இ) ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம் எது?

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.34 கட்டாயம்) 2 x 3 = 6**

32. மன்னர் இடைக்காடனாருக்கு சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக

33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) 'மாற்றம் எனது' - எனத் தொடங்கும் பாடல் **(அல்லது)**



www.Padasalai.Net
CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) 'வெய்யோனொளி' எனத் தொடங்கும் பாடல்

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** **2 x 3 = 6**

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக?
36. தற்குறிப்பேற்ற அணிச் சான்றுடன் விளக்குக?
37. அருளொடும் அன்போடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்ப்பாடு தருக?

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **5 x 5 = 25**

38. அ) கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி? **(அல்லது)**
ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரிக்க?
39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக **(அல்லது)**
ஆ) உங்கள் தெருவில் பழுதடைந்த மின்விளக்குகளால் சாலையில் இரவு நேரங்களில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி பழுதிநீக்க ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக?
40. காட்சியைக் காண்டு கவினுற எழுதுக?



---

41. விண்ணப்பப் படிவத்தை நிரப்புக:

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : நாள் : வகுப்பும் பிரிவும் :

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு:
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும்:

மாணவ / மாணவியின் கையெழுத்து

www.Padasalai.Net

CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

42. அ) மொழிப்பெயர்க்க :
Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas. **(அல்லது)**

ஆ) அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைக்கட்டி தோற்பாவைக் கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்ட ஆடியவாறு மன்னனின் மக்கள்... இக்கலைகளை நண்பர்களுடன் பார்த்தவாரும் செல்கிறீர்கள்.
இக்கலைகலைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்புவனவற்றறை வரிசைப்படுத்துக.

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **3 x 8 = 24**

43. அ) சங்ககால விருந்தோம்பலை பாடத்தின் வழிநின்று விளக்குக? **(அல்லது)**
ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து எழுதுக?

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' - சிறுகதையில் மனிதத்தை வெளிபடுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க

45. அ) குறிப்புரையைக் கொண்டு கட்டுரை எழுதுக?
முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை **(அல்லது)**
ஆ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் - கட்டுரை எழுதுக?

www.Padasalai.Net

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com